## கருணாநிதி ஒரு துரோகி

தமிழக முதலமைச்சர் கருணாநிதி ஒரு தமிழ் இனத்துரோகி என மலேசிய பினாங் மாநில துணை முதலமைச்சர் பேராசிரியர் பழனியப்பன் ராமசாமி தெரிவித்துள்ளார். இணையதளமொன்றுக்கு பினாங் மாநிலத்திலுள்ள தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து வழங்கிய் பிரத்தியேக பேட்டியிலேயே பேரசிரியர் ராமசாமி இவ்வாறு குறிப்பிட்டார். முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூட ஒரு துரோகிதான் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். தமிழகத்தில் நடிகரும், இயக்குநருமான சீமானின் கட்சி மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், நாடு திரும்பியிருந்த நிலையிலேயே துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி பேட்டியளித்தார். தமிழகத்தில் அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்படாதவரை, இலங்கைத் தமிழர்களுக்கு மாற்றம் ஏற்படாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பிளவுகளை களைவதற்கு நடவடிக்கை வேண்டும்

சமூகங்களுக்கிடையில் நிலவிவரும் பிளவுகளை களைவதற்கு சிறீலங்கா அரசாங்கம் கூடுதல் முனைப்புக் காட்டவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது, அண்மையில் நடைபெற்று முடிந்த தேர்தல்களின் மூலம் மக்கள் வழங்கிய ஆணையை இந்த நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும் என அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்து ஓராண்டு கழிந்துள்ள நிலையிலும் எதிர்பார்த்தளவு மாற்றம் இலங்கையில் ஏற்படவில்லை என சர்வதேச சமூகம் சுட்டிக்காட்டி வருகின்றது. ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது மக்கள் வழங்கிய ஆதரவினை சமூகங்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகளைக் களைவதற்கு சரியான முறையில் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## உழவு இயந்திரம் மோதி ஒருவர் பலி

உரும்பிராய் விளாத்தியடியில் கடந்த 25ம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் உழவு இயந்திரமும் உந்துருளியும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவத்தில் வியாபாரியான சோனக தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனிஸ் (42) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். அதேயிடத்தைச் சேர்ந்த மொஹமட் மாஜித் (17) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வியாபார நோக்கத்துடன் உரும்பிராய் நோக்கிச் சென்ற இவர்கள் உழவு இயந்திரம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோது, இவ் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மன்னாரில் ஆராய்ச்சி செய்யும் இந்தியா

மன்னார் பிரதேசத்திலுள்ள எண்ணெய் வளம் தொடர்பில் ஆராய்ச்சி செய்யும் நடவடிக்கையில் இந்திய நிறுவனம் ஒன்று ஈடுபடவுள்ளதாக சிறீலங்கா பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார். இதற்கான விலைமனுக் கோரல் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் எதிர்வரும் 2011ம் ஆண்டு ஜனவரி - மார்ச் மாதங்களுக்குள் நிறைவடையும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சிறீலங்கா வசமாகிய கிளி. வைத்தியசாலை

30 வருடங்களாக சிறீலங்காவினால் ஆக்கிரமிக்கமுடியாமல், ஆக்கிரமித்தும் நடத்தமுடியாமல் இருந்த கிளிநொச்சி மருத்தவமனை மீண்டும் சிறீலங்காவின் ஆக்கிரமிப்பில் தற்போது திறக்கப்பட்டுள்ளது. யுனிசெப் நிறுவனத்தின் 25 மில்லியன் நிதியுதவியுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா ஆக்கிரமிப்புக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இயங்கிய இவ் வைத்தியசாலை மீது சிறீலங்காவின் படைகள் பல முறை தாக்குதலை நடத்தி பெரும் உயிரிழிவுகளையும், உடமை அழிவுகளையும் ஏற்படுத்தியிருந்தது. கூலிக்குழுத் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, சம்பிக்க ரணவக்க, பசில் ராஜபக்ச ஆகியோர் இத்திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். 15 மில்லியன் செலவில் கட்டிட புனர்நிர்மான வேலைகளும், 10 மில்லியன் செலவில் வைத்தியசாலைக்கான உபகரணங்களும் யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

## உலகின் உச்சிக்கு சென்ற முதல் தமிழர்

சென்னையை சேர்ந்த சந்தோஷ்குமார் தலைமையிலான 5 பேர் கொண்ட மலையேற்ற குழுவினர், கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இமயமலையின் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்தனர். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த முதல் தமிழர் என்ற பெருமை பெற்ற சந்தோஷ்குமார், எவரெஸ்ட் சிகர உச்சியை அடைந்ததும் ‘தமிழ் வாழ்க’ என்ற உற்சாக கோசத்தை எழுப்பினார். சாதனை படைத்த சந்தோஷ்குமார் குழுவினர், தங்கள் குடும்பத்தினருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

## இனப்படுகொலை புரிந்தவர்கள் ஐ.நா படையில்!

சிறீலங்கா இராணுவத்தின் படைப்பிரிவொன்று ஐ.நா படையுடன் இணைந்து பணிபுரிவதற்காக மத்திய ஆபிரிக்க குடியரசு மற்றும் சாட் ஆகிய நாடுகளுக்கு விரைவில் செல்லவுள்ளது. மூன்று அதிகாரிகள் உட்பட மொத்தம் 61 பேர் இந்தப் படைப்பிரிவில் அங்கம் வகிக்கவுள்

(08ம் பக்கம் பார்க்க)

# சிறீலங்காவின் போர்க் குற்றம்





